DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -350/2025

Prosecution PW -6

| | | |
|---|---|---|
| Name | Vishwanathan | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 10.01.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1,A3 to A5present. A2-Died

<u>முதல் விசாரணை</u>

நான் திருவையாறு அந்தணக்குறிச்சியில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். சாட்சி காமராஜ் என் நண்பர். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1,2 யை தெரியும். 25.08.2023 ஆம் தேதி நானும், காமராஜ்ம் வேலை சம்மந்தமாக விலாங்குடி பஸ்ஸ்டாண்டுக்கு சென்று பேசிக்கொண்டிருந்தபோது மாலை 4.30,5.00 மணிவாக்கில் ஆய்வாளர் 1 வது எதிரி துளசிராமனை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். 1 வது எதிரியுடன் 2 வது எதிரி செல்வம்,3 வது எதிரி அருண், மற்றும் 4 வது எதிரி சதிஷ்குமார் ஆகியோர் இருந்தனர். அ.சா.1,2 வெட்டுப்பட்டு சம்மந்தமாக போலிசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். 1 வது எதிரி துளசி ராமன் சம்பவத்தின்போது வெட்ட பயன்படுத்திய அரிவாளை வைத்தியநாதன் பேட்டை சுடுகாட்டில் மறைத்து வைத்திருப்பதாகவும், அங்கு அழைத்து சென்றால் எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறி எங்களுடன் எதிரிகள் நால்வரும் வைத்தியநாதன் பேட்டை சுடுகாட்டிற்கு வந்தனர். அங்கு 1 வது எதிரி துளசிராமன் அரிவாளை எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் ஒரு பேப்பரில் எழுதி கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைன் சாட்சி காமராஜ்ம் சாட்சி கையொப்பம் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.**3**. நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.1 அரிவாளைதான் 1 வது எதிரி எடுத்து ஆஜர் செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

நான் அ.சா.1ன் உடன் பிறந்த சகோதரர். 1வது எதிரியை விசாரிக்கும்போது ஆய்வாளர் அவரது மடிக்கணிணியில் தட்டச்சு செய்தார். பிரிண்ட்டு எங்கு எடுத்தார்கள் என்று தெரியாது. கால் மணிநேரத்தில் பிரிண்ட்டு எடுத்து வந்தார்கள் கையெழுத்து போட்டேன். கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.3 ல் 1வது எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். சுடுகாடு திறந்தவெளி இடம் என்றால் சரிதான். பிரிண்ட்டு வந்தபிறகுதான் சுடுகாட்டிற்கு சென்றோம். 1வது எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும கொடுக்கவில்லை என்றாலும், போலிசார் காவல் நிலையத்தில் தயாரித்து வைத்த ஆவணத்தில் கையெழுத்து போட்டுவிட்டு ,போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியிடம் இருந்து சா.பொ.1 அரிவாளை கைப்பற்றப்படவில்லை என்றாலும், அ.சா.1ன் சகோதரர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

(ஒ/ம்-G.சுந்தரராஜன், B.Sc., B.L.,)

கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்